I Additional District Court, Thoothukudi.

O.S.No.150/2025 நாள் : 07.07.2026 பி.சா.1– திரு. சுதாகரன்.

குறுக்கு விசாரணை :–

வழக்குரையை படித்து பார்த்துதான் எதிர் வழக்குரையை தாக்கல் செய்தேன். தாவா சொத்துக்கள் என் தகப்பனார் சுடலையாண்டிக்கு கிரையங்கள் மற்றும் பட்டாக்கள் மூலமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்துவிட்டதால் வாதிகளுக்கு தாவா சொத்தில் பாகம் உள்ளது. ஆனால் 2ம் வாதிக்கு பாகம் கொடுக்கலாம். 1ம் வாதிக்கு ஓய்வூதியம் வருவதாலும், அவரை நாங்கள் நல்லபடியாக பார்த்துக் கொள்வதாலும் 1ம் வாதிக்கு பாகம் கொடுக்க தேவையில்லை. 2025 மே மாதத்திலிருந்து 1ம் வாதி 2ம் வாதியின் பராமரிப்பில் இருந்து வருகிறார். 1ம் வாதிக்கு ஞாபக மறதி இருப்பதாக காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 1ம் வாதி 1ம் தபசில் சொத்துக்களைப் பொறுத்து தனக்கு உண்டான 1/6 பாகத்தை பொறுத்து 2ம் வாதி பெயரில் வா.சா.ஆ 18, 19ன் படி செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டதால் 1ம் தபசில் சொத்தில் 2ம் வாதிக்கு 2/6 பங்கு உள்ளது என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்துக்களில் 6 பாகங்களாக பிரித்து வாதிகளுக்கு 2 பாகங்கள் ஒதுக்குவதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் 5 பாகங்களாக பிரித்துக் கொள்வதில் ஆட்சேபனையில்லை. என் தகப்பனாரின் வாரிசுகள் என்ற முறையில் வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் தலா 1/6 பாகம் 2ம் தபசில் சொத்தில் உள்ளது என்றால் 1/5 பாகம்தான் உள்ளது. 1ம் வாதிக்கு சொத்தை கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தில் அவருக்கு பாகம் கொடுக்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 18, 19

ஆவணங்கள் மோசடியாக ஏற்படுத்தியதாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.07.07 18:19:15 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.